Aparajitha

# வெற்றியின் விதைகள்



தளிர்த் திறன் திட்டம்

செய்திமடல்

வாழ்க்கைத் திறன்களின் வழியாக நிலைமாற்றம்

நாளை

2018

# வணக்கம்!

தென்கோடியிலிருக்கும் தமிழ்நாடு, மேற்குத் திசையிலிருக்கும் குஜராத், வடக்கே இமயத்தின் மடியிலிருக்கும் ஹிமாசலப் பிரதேசத்தின் மனாலிப் பகுதி என இந்தியாவின் மூன்று திசைகளில் 9 இடங்களில் நடைபெற்ற 11 கோடைமுகாம்களில் பங்கேற்ற மாணவர்களுக்கு தளிர்த்திறன் திட்டத்தின் வழியாக வாழ்க்கைத்திறன் கல்வியை வழங்கி இவ்வாண்டின் கோடைக்காலம் கழிந்திருக்கிறது.

ஒரு பள்ளியில் விளையாட்டுத்திடலை உருவாக்க உதவியும் மற்றொரு பள்ளியில் விளையாட்டுடை வழங்கியும் இவ்வாண்டின் நிறுமச் சமூகப் பொறுப்புணர்வுச் (Corporate Social Responsibility) செயல்பாடுகள் தொடங்கி இருக்கின்றன.

இவை பற்றிய செய்திகளையே இம்மடல் தங்களோடு பகிர்ந்துகொள்ள வருகிறது. படியுங்கள். . . தங்களின் எண்ணங்களைப் பகிருங்கள். . .

தொடர்ந்து உங்களின் ஆதரவையும்
ஆலோசனையையும் எதிர்நோக்கும்,

*அரிஅரவேலன்*
*மேலாளர்*

27
இதழ்

**உள்ளே. . .**


வாழ்க்கைத்திறன் கல்வி கோடைக்கால முகாம்கள்

37,550 பள்ளிகளில் டிம் டிம் தாரா

விளையாட்டுப் பயிற்சி முகாமினருக்கு T-சட்டைகள்

விளையாட்டுக்களம் அமைக்க. . .

எதிரொலிகள்



**அபராஜிதா அறக்கட்டளை**
5அ,வி.பி.இரத்தினசாமி சாலை
பீபிகுளம்
மதுரை 625 002
www.aparajitha.org
0452-4375252
info@aparajitha.org



தனிச்சுற்றுக்கு மட்டும்


***த**ளிர்த் திறன் திட்டமானது வாழ்க்கைத்திறன் கல்வியை ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வழங்குகிறது. உலக நலவாழ்வு அமைப்பு பட்டியலிட்டு உள்ள பத்து வாழ்க்கைத் திறன்களை அடிப்படையாகக்கொண்டு மகிழ்வுக்கல்வி வடிவில் உருவாக்கப்பட்ட பாடங்கள் தொடக்கப்பள்ளி வகுப்புகளுக்கு ஆசிரியர் கையேட்டின் வழியாகவும் நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை வகுப்புகளுக்கு காணொளி வழியாகவும் கற்பிக்கப்படுகின்றன. பொறுப்புடைய மாணவர்களை உருவாக்கும் நோக்குடைய இத்திட்டம் வெள்ளோட்டமாக 2008-09 ஆம் ஆண்டில் ஐந்து மேல்நிலைப் பள்ளிகளில் தொடக்கப்பட்டு, 2009-10 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறையால் தமிழகத்தில் அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திற்கும் விரிவாக்கப்பட்டது. பின்னர் விருப்பம் உள்ள தொடக்கப்பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள் ஆகியவற்றில் இப்பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. தற்பொழுது இத்திட்டம் தமிழ்நாடு, குஜராத், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், உத்தர பிரதேசம், அரியானா ஆகிய 6 மாநிலங்களில் செயலாக்கம் செய்யப்படுகிறது.*

## வாழ்க்கைத்திறன் கல்வி கோடைக்கால முகாம்கள்

"அறிவு, மனப்பான்மை, திறன் ஆகிய மூன்றினையும் சமப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட நடத்தை மாற்ற அல்லது நடத்தை மேம்பாட்டு அணுகுமுறையாக வாழ்க்கைத்திறன் அடிப்படையிலான கல்வி அமைந்திருக்கிறது" என்கிறது யுனிசேப் (UNICEF) அமைப்பு. அவ்வாழ்க்கைத்திறன்களை விளையாட்டு, பாட்டு, நடிப்பு, செயல்பாடுகள், கைவினைகள், வண்ணந்தீட்டுதல் ஆகியவற்றின் வழியே குழந்தைகள் கற்றுக்கொள்வதற்காக கோடை முகாம்களை அபராஜிதா அறக்கட்டளை ஆண்டுதோறும் ஒருங்கிணைக்கிறது.

### தமிழ்நாடு



அவ்வகையில் இவ்வாண்டு மே 7 முதல் 11ஆம் நாள் வரை அபராஜிதா கார்ப்பரேட் சர்வீஸஸ் லிமிடெட் பணியாளர்தம் குழந்தைகளுக்கு மதுரை ஒய்.எம்.சி.ஏ. பேசவும் கேட்கவும் இயலாதவர் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் ஒரு முகாம் நடைபெற்றது. இதில் 56 மாணவர்கள் கலந்துகொண்டனர். மே 14 முதல் 18ஆம் நாள் வரை மதுரை அன்னைநகர் குடியிருப்போர் நலச்சங்கத்தோடு இணைந்து அந்நகரில் 24 குழந்தைகளுக்கு அவர்களின் குடியிருப்புப் பகுதியில் மற்றொரு முகாம் நடைபெற்றது. மே 21 முதல் 25ஆம் நாள் வரை மதுரை விளாங்குடியில் அப்பகுதியைச் சேர்ந்த 22 குழந்தைகளுக்கு இன்னொரு முகாம் நடைபெற்றது.

"தலைமைத்துவப் பண்புகள்" என்னும் கருத்தை குழந்தைகளின் மனதில் விதைப்பதே இம்முகாம்களின் நோக்கமாக இருந்தது. ‘விரைந்து முடிவெடு’, ‘தேடிக் கண்டுபிடி’, ‘மாற்றிச்செய்’, ‘பந்தாட்டம்’ ஆகிய விளையாட்டுகள் ‘புதிதாகச் செய்க’, ‘நடித்துக்காட்டுதல்’, ‘கதைகட்டுக’, ‘எனது திறன்கள்’, ‘தாளில் உருவங்கள் செய்தல்’, ‘தாள் அலங்காரம்’, ‘முப்பரிமாண ஓவியந் தீட்டல்’, ‘வண்ணந் தீட்டல்’, ‘நடனம்’, ‘களிமண் உருவங்கள் செய்தல்’ ஆகிய செயற்பாடுகள் வழியாக தம்மையறிதல், ஒத்துணர்தல், பிறருடன் பழகுதல், கருத்துப்பரிமாற்றம், ஆக்கச் சிந்தனை, ஆய்வுச் சிந்தனை, முடிவெடுத்தல், சிக்கலைத் தீர்த்தல், உணர்வழுத்தத்திற்கு ஈடுகொடுத்தல், மனவழுத்தத்திற்கு ஈடுகொடுத்தல் ஆகிய வாழ்க்கைத் திறன்களையும் அணியாகச்செயற்படுதல், பிறருக்கு உதவுதல், தலைமையேற்றல் ஆகிய பண்புகளையும் பெற்றனர்.

***3***
***மாநிலங்கள்***

***9***
***இடங்கள்***

***11***
***முகாம்கள்***

***993***
***மாணவர்கள்***

## குஜராத்



குஜராத் மாநிலம், வதோதரா மாவட்டத்தில் தன்டெஜ் என்னும் ஊரிலுள்ள அரசு தொடக்கப்பள்ளியில் ஏப்ரல் 18ஆம் நாள் நடைபெற்ற முகாமில் 48 மாணவர்களும் 5 ஆசிரியர்களும் கலந்துகொண்டனர். இதில் ஆக்கமாய்ச் சிந்தித்துப் பழகுக, தொலைபேசி நன்னடத்தைகளைப் பழகுக ஆகிய பாடங்கள் கற்பிக்கப்பட்டன.

அகமதாபாத் மாவட்டம் சரோடி என்னும் ஊரிலுள்ள பள்ளியில் ஏப்ரல் 21, 23 ஆகிய நாள்களில் நடைபெற்ற முகாமில் 33 மாணவர்களும் 2 ஆசிரியர்களும்

கலந்துகொண்டனர். இதில் வணக்கம் தெரிவித்துப் பழகுக, உரையாடிப்பழகுக ஆகிய பாடங்கள் கற்பிக்கப்பட்டன.

அகமதாபாத் மாவட்டம் எஸ்டொலபாத் என்னும் ஊரிலுள்ள தொடக்கப்பள்ளியில் நடைபெற்ற முகாமில் 45 மாணவர்களும் 5 ஆசிரியர்களும் கலந்துகொண்டனர். இதில் பேராசையைக் கையாளப் பழகுக என்னும் பாடத்தைக் கற்றனர்.

அகமதாபாத் நகரில் இயங்கும் ஜீவன்வதீர்த் ஃபவுண்டேசன் (Jivantirth Foundation) என்னும் நிறுவனத்தோடு இணைந்து ராம்பீர் நோ டெக்ரோ என்னும் குடிசைப்பகுதியில் ஏப்ரல் 26, 28 ஆகிய நாள்களில் முகாம் நடைபெற்றது. இதில் 60 மாணவர்களும் 15 தன்னார்வலர்களும் கலந்துகொண்டனர். தன்னம்பிக்கையால் வெல்லப் பழகுக, வீணாக்காதிருக்கப் பழகுக ஆகிய இரு பாடங்களைக் கற்றனர்.

### ஹரியானா



ஹரியானா மாநில அரசால் ஆண்டுதோறும் கோடை சாகச முகாம் (Summer Adventure camp) ஹிமாசலப்பிரதேசத்தில் ஹரிப்பூர் (Haripur), பனுப்புல் (Bhanupul) என்னும் ஊர்களில் நடைபெறுகிறது. அவ்வாண்டு அம்முகாமில் பங்கேற்ற 993 மாணவர்களுக்கு வாழ்க்கைத்திறன் கல்வி தளிர்த்திறன் திட்டத்தின் இந்திவடிவமான டிம் டிம் தாரே பாடங்கள் வழியாகக் கற்பிக்கப்பட்டன. இம்முகாம் இரண்டு பிரிவுகளாக நடைபெற்றது, முதலாவது பிரிவிற்கான முகாம் மே 21, 22, 23 ஆம் நாள்களிலும் இரண்டாவது பிரிவிற்கான முகாம் மே 27, 28, 29ஆம் நாள்களிலும் நடைபெற்றன. இம்முகாம்களில் மற்றவர்களின் உடைமை மதிக்கப் பழகுக, வீணாக்காதிருக்கப் பழகுக, பொதுப்போக்குவரத்தைப் பயன்படுத்திப் பழகுக, முரட்டுத்தனத்தைத் தவிர்க்கப் பழகுக, தன்னம்பிக்கையால் வெல்லப் பழகுக, வணக்கம் தெரிவித்துப் பழகுக, உரையாடிப் பழகுக, கொடைகொடுத்துப் பழகுக ஆகிய பாடங்கள் கற்பிக்கப்பட்டன.

## விளையாட்டுப் பயிற்சி முகாமினருக்கு T-சட்டைகள்







*மதுரை டி.வி.சுந்தரம் மேல்நிலைப்பள்ளியில் ஆண்டுதோறும் கோடைகால விளையாட்டுப் பயிற்சி முகாம் நடைபெறுகிறது. இவ்வாண்டு அதில் பங்கேற்ற இருபால் மாணவர்கள் 200பேருக்கு அபராஜிதா அறக்கட்டளையின் சார்பில் T-சட்டைகள் நன்கொடையாக வழங்கப்பட்டன.*

## விளையாட்டுக்களம் அமைக்க. . .

*மதுரை தூய பிரிட்டோ மேல்நிலைப்பள்ளியில் கைப்பந்து விளையாட்டுக்களம் அமைப்பதற்குத் தேவையான 150 சிமிண்ட் மூடைகள் அபராஜிதா கார்ப்பரேட் சர்வீஸஸ் (பி) லிமிடெட்டின் சார்பில் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.*

# எதிரொலிகள்

தளிர்த்திறன் திட்டத்தின் சாதனைகளைக் காண மிகவும் நிறைவாக இருக்கிறது. இது எண்ணற்ற குழந்தைகளைச் சென்றடைவதை எண்ணி மிகவும் மகிழ்கிறேன். அவர்களில் மிகச் சிலரேனும் தங்களது அன்றாட வாழ்வில் இதன் பயனை அடைவார்கள் என நம்புவோம். முகப்புப் பக்கம் மிகவும் கவனத்தை ஈர்க்கிறது.

**- கி. துர்கா**

*அறங்காவலர், அபராஜிதா அறக்கட்டளை, மதுரை, தமிழ்நாடு.*

பள்ளிகளின் எண்ணிக்கை, பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கை ஆகியன என்னை மிகவும் ஈர்க்கின்றன. திட்டத்தின் தொடக்க காலத்தில் இதில் நானும் பங்களித்திருக்கிறேன் என்பதனால் பெருமையடைகிறேன். வருங்காலச் சமுதாயத்தில் நல்விளைவை இது ஏற்படுத்தும் என நான் உறுதியாக நம்புகிறேன். பாராட்டுகளும் நல்வாழ்த்துகளும்.

**- என். கிருஷ்ணமூர்த்தி**

*டி.வி.எஸ் அன்ட சன்ஸ், மதுரை, தமிழ்நாடு.*

அருமை . . . ஆயிரமாயிரம் மலர்க்கொத்துகளை அளித்தாலும் வாழ்த்துவதற்குச் சொல்களில்லை.

**- யுவராஜா**

*துணைப்பொறுப்பாசிரியர், சுட்டிவிகடன், சென்னை, தமிழ்நாடு.*

கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை, குறிப்பாகக் கடந்த ஆண்டில், மிகவும் அதிகரித்திருப்பது என்னை மிகவும் ஈர்க்கிறது. 17 இலக்கம் இளம்மனங்களைச் சென்றடைந்திருப்பது இமலாயச் சாதனை ஆகும்; இச்சாதனை நாட்டின் ஒரு மூலையிலன்றி, 3 வெவ்வேறு மொழிகளில் 6 மாநிலங்களில் நடைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. துணைக்கோள் தொழில்நுட்பம் சாதனைக்கு மகுடம் வைத்ததைப்போல் அமைந்துள்ளது.

**- எஸ். இராதாகிருஷ்ணன்**

*ஐத்திராபாத், தெலுங்கானா.*

தொடக்கம் முதலே பெருவியப்புத்தரும் செயல்பாடு! பெரும்பயணத்திற்கான நேர்த்திமிகு காலடிச் சுவடுகள்!! மனிதகுலத்திற்கு மிகச்சிறப்பான பணி. அத்தூய பணியில் நாங்களும் பங்கேற்றிருக்கிறோம் என்பதில் மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறோம்.

**- கே. சாரதி**

*முதல்வர், சுந்தரம் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப் பள்ளி, ஆவியூர், தமிழ்நாடு.*

இந்தியாவின் எட்டு மாநிலங்களில் செயல்படுத்தப்படுகிறது என்பதை அறியும்பொழுது ஊக்கம்பிறக்கிறது. வருமாண்டுகளில் இன்னும் அதிகமான மாநிலங்களில் இப்பணி நடைபெறும் என நம்புகிறேன்.

**- இரகுவீர்சிங் சூதாசமா**

*வட்டார வள ஒருங்கிணைப்பாளர் - அனைவருக்கும் கல்வி இயக்கம், தந்துகா, குஜராத்.*

டிம் டிம் தாரா பல்வேறு மாநிலங்களுக்குப் பரவியிருக்கிறது என்பதைச் செய்திமடலில் படித்து மகிழ்கிறோம். இத்திட்டம் குசராத் மாநிலத்தில் ஐந்தாண்டுகளை நிறைவுசெய்திருப்பதால் நாங்கள் ஆசிர்வதிக்கப்பட்டு இருக்கிறோம். வரும் ஆண்டுகளில் இன்னும் அதிகமான குழந்தைகளைச் சென்றடைய வாழ்த்துகிறோம்.

***- பூமிக்குபாய் படேல்***

*வட்டார வள ஒருங்கிணைப்பாளர் - அனைவருக்கும் கல்வி இயக்கம், அகமதாபாத், குஜராத்.*

டிம் டிம் தாராவின் பயன்பாடு மிகவும் நன்று. இது குழந்தைகளின் நடத்தையில் நிறைய முன்னேற்றங்களுக்கு வழிகாட்டுகிறது. நற்பணியைத் தொடர்க.

***- துஷார்***

*குறுவட்டார வள ஒருங்கிணைப்பாளர், அனைவருக்கும் கல்வி இயக்கம், சனந்த், குஜராத்.*

உங்களின் இத்திட்டம் அனைத்து மாநிலங்களையும் சென்றடைந்து இந்நாட்டிலுள்ள மாணவர்கள் அனைவரும் பயனடைவார்கள் என நம்புகிறேன்.

***- தர்சன்பென் படேல்***

*முதல்வர், தொடக்கப்பள்ளி, ஃபன்காடி, குஜராத்.*

அபராஜிதா அறக்கட்டளை குழந்தைகளுக்கு அடிப்படையில் தேவையான கல்வியை வழங்குகிறது. இது இன்னும் அதிகமான மாநிலங்களைச் சென்றடைய வாழ்த்துகள்.

***- தேஜல்பன் ஷா***

*ஆசிரியர், தொடக்கப்பள்ளி, இராம்டுஜினோகுவோ, குஜராத்.*

அபராஜிதா அறக்கட்டளை வருங்காலத் தலைமுறையினருக்கும் நற்சமுதாயத்தை கட்டமைப்பதற்குமான உன்னதப் பணியைச் செய்கிறது. நல்வாழ்த்துகள்!

***- வைபவ்பாய் படேல்***

*முதல்வர், தொடக்கப்பள்ளி, இரயில்வே நிலையம், வஸ்தராபுரம், குஜராத்.*

குழந்தைகளுக்கும் இளையோருக்கும் வியக்கவைக்கம் பணியைச் செய்கின்ற அணியினருக்குப் பாராட்டுகள்! நாட்டின் எதிர்காலத்தைத் தம் கையில் வைத்திருக்கும் குழந்தைகளுக்கும் இளையோருக்கும் பணியாற்றுவதால் அந்த எதிர்காலம் உங்களின் கைகளில் இருக்கிறது!

***- இரம்யா சுப்பிரமணியன்***

*தலைமை வணிகப்பகுப்பாய்வாளர், அபராஜிதா, மதுரை, தமிழ்நாடு.*

நாடெங்கும் தளிர்த்திறன் திட்டம் நல்வளர்ச்சியடைவதைக் காண மகிழ்ச்சி! நீடித்து நிலைத்த முயற்சியை மேற்கொண்டிருக்கும் அபராஜிதா அறக்கட்டளை அணியினர் அனைவருக்கும் எனது இதயங்கனிந்த பாராட்டுகள்!

***- க. ஆனந்தராஜ்***

*வணிகத் தலைவர் - இசிஎஸ், அபராஜிதா, மதுரை, தமிழ்நாடு.*

தளிர்த்திறன் திட்டத்தின் தோற்றம், வளர்ச்சி, வீச்சு, அண்மையில் துணைக்கோள் தொழில்நுட்பத்தை விரிவாகப் பயன்படுத்தியது ஆகியன அனைத்தும் மிகவும் என்னை ஈர்த்தன. நல்வாழ்த்துகள்! நற்பணியைத்தொடர்க!! அணியினர் அனைவருக்கும் பாராட்டுகள்!!

***- முனைவர் எஸ். வெங்கடேஷ்***

*முதுநிலை செயன்முறைப் பகுப்பாய்வாளர், அபராஜிதா, மதுரை, தமிழ்நாடு.*